සියලුම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All rights reserved

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය/இலங்கைச் சட்டக்கல்லூரி /Sri Lanka Law College

இலங்கைச் சட்டக்கல்லூரி அனுமதிப்பதற்கான பொதுப் பரீட்சை - 2022 நவெம்பர்

மூன்று மணித்தியாலம்

## (01) மொழித்திறன்

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

உமது சுட்டெண்ணை புள்ளிக்கோட்டில் மட்டும் எழுதுக

.............................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம் :

- இவ்வினாத்தாள் 9 பக்கங்களில் 38 வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
- மண்டப மேற்பார்வையாளரின் அறிவுறுத்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுத்தல்களுக்கமைய அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்கவேண்டும்
- கறுப்பு அல்லது நீலநிறப்பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.
- இவ்வினாத்தாளை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல் அதன் ஒளிப்படத்தை (photoshoot) எடுத்தல் என்பன குற்றமாகும்.
- தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துக்கள் அழிக்கும் வெண்மைப்பயன்பாடு பென்சிலைப்பயன்படுத்தி எழுதும் விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 – 11 | |
| 3 | 12 – 21 | |
| 4 | 22 – 31 | |
| 5 | 32 – 35 | |
| 5 – 7 | 36 | |
| 7 – 8 | 37 | |
| 8 - 9 | 38 | |
| மொத்தம் | | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு செய்தவர் | |
| புள்ளிகளைப் பரிசோதித்தவர் | |

- **1 தொடக்கம் 3 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லை தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** **(03 புள்ளிகள்)**

1. (1) இயக்குநர் (2) கம்பளி (3) கைம்மாற்று (4) சுகயீனம் (...........)

2. (1) தீவட்டி (2) பூசணி (3) புடோலங்காய் (4) கொப்பூழ் (...........)

3. (1) முந்நூறு (2) கோவை (3) சம்மந்தம் (4) சந்தனம் (...........)

- 4 தொடக்கம் 6 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையை மிகச்சரியாக காட்டி நிற்கும் விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. **(03 புள்ளிகள்)**

4. (அ) வஞ்சினம் (ஆ) பேரறிவு (இ) கலாசாரம் (ஈ) சுற்றுலா
   (1) இ, ஈ, ஆ, அ (2) அ, ஆ, இ, ஈ (3) ஈ, இ, அ, ஆ (4) ஆ, இ, அ, ஈ (...........)

5. (அ) சர்வாதிகாரம் (ஆ) சால்பு (இ) சாயல் (ஈ) சனநாயகம்
   (1) ஆ, அ, ஈ, இ (2) அ, ஈ, இ, ஆ (3) இ, ஈ, ஆ, அ (4) ஈ, அ, ஆ, இ (...........)

6. (அ) உடைமை (ஆ) உத்தியானம் (இ) உல்லாசம் (ஈ) உக்கிரம்
   (1) அ, ஆ, ஈ, இ (2) ஆ, அ, இ, ஈ (3) இ, அ, ஈ, ஆ (4) ஈ, அ, ஆ, இ (...........)

- **7 தொடக்கம் 9 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களைச் சந்திபிரித்து எழுதும் முறையை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்து அதனைக் குறிக்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**(03 புள்ளிகள்)**

7. வெற்றாரவாரம் என்பதைச் சந்திபிரித்தெழுதும் சரியான முறை
   (1) வெற்று + ஆரவாரம் (2) வெறுமை + ஆரவாரம்
   (3) வெற்றாரம் + ஆரம் (4) வெறு + ஆரவாரம் (...........)

8. ஆலங்காய் என்பதைச் சந்திபிரித்தெழுதும் சரியான முறை
   (1) ஆ + காய் (2) ஆலம் + காய்
   (3) ஆலங் + காய் (4) ஆல் + காய் (...........)

9. கதவு + ஓரம் என்பதைச் சரியாகப் புணர்த்தி எழுதினால் வருவது
   (1) கதவோரம் (2) கதவினோரம்
   (3) கதவுவோரம் (4) கதவ்வோரம் (.............)

- 10ம் வினாவில் மாறியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள சொல்லொன்று வரும். அச்சொல்லை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**(01 புள்ளிகள்)**

10. சி, பு, ய, மை, ர, ப், ல, அ (.....................................................)

- **11 தொடக்கம் 15 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் அவற்றைத் திருத்தி சரியான வாக்கியங்களை வினாவின் கீழே தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. அது சரியாயின் "சரி" என்று மட்டும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**(05 புள்ளிகள்)**

11. நான் அவனுக்கு உதவி செய்ததன் காரணம் அவனை விரும்பியதால்

.................................................................................................................................

.................................................................................................................................

12. மாணவன் கூறியது என்னவெனில் "நான் கல்வியை விரும்பிக் கற்கின்றேன்" என்றான்.

..................................................................................................................................................

..................................................................................................................................................

13. வயோதிப காலத்தில் செலவு செய்வதற்காகப் பணம் சேமிக்கப்படல் வேண்டும்.

..................................................................................................................................................

..................................................................................................................................................

14.. தன் மகளைப் பிறர் போற்றினால் தாய் பெருமகிழ்ச்சி அடைவாள்.

..................................................................................................................................................

..................................................................................................................................................

15. உலகில் பல கலைகள் உண்டு, அதில் நாட்டியமும் ஒன்று.

..................................................................................................................................................

..................................................................................................................................................

- **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களிலே தரப்பட்டுள்ள மரபுச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தை தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(05 புள்ளிகள்)

16. ஒரு தொழிலை மனவிருப்பின்றிக் கடமைக்காக செய்தல் என்பதனைக் குறிக்கும் தொடர்

(1) ஆறப்போடுதல் (2) கடன்கழித்தல்
(3) காலம் தாழ்த்துதல் (4) தட்டிக்கழித்தல் (............)

17. மனக்காழ்ப்பினால் ஒரு குடும்பத்தை முற்றாக அழித்தல் என்பதற்கான பொருத்தமான தொடர்

(1) முற்றாய் கற்றறிதல் (2) தூண்டிவிடுதல்
(3) முற்றாய் அழித்தல் (4) கருவறுத்தல் (............)

18. ஆய்தோய்ந்து பார்த்து கருமஞ் செய்யாத ஆள்

(1) அவசரக்குடுக்கை (2) ஆசாடபூதி
(3) ஓட்டைவாயன் (4) நயவஞ்சகன் (............)

19. சாதுபோல் நடித்து தீது புரியுமொருவனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான இலக்கணத் தொடர்

(1) தொழுகள்ளன் (2) அண்டப்புரண்டன்
(3) உருத்திராட்சப்பூனை (4) அரைமனிதன் (............)

20. உப்பில்லா பேச்சு என்பதன் பொருள்

(1) நயத்தகு பேச்சு (2) பயனற்ற பேச்சு
(3) முடிவில்லாத பேச்சு (4) நீதி நியாயமற்ற பேச்சு (............)

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தை தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**(05 புள்ளிகள்)**

21. வீண் செலவு செய்யினும் அக்கணக்கையும் அறிந்திருத்தல் நன்று

(1) வளவனாயினும் அளவறிந்து அளித்துண்
(2) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
(3) விரலுக்குத் தக்கதுதான் வீக்கம்
(4) பாத்திரமறிந்து பிச்சையிடு (............)

22. பின்னுக்கு வரப்போகும் அபாயத்தை முன்யோசனையோடு தடுக்க முயலவேண்டும் எனும் கருத்தைதரும் பழமொழி

(1) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
(2) வெள்ளம் வருமுன்னே அணைகோல வேண்டும்
(3) ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
(4) கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா (............)

23.. மௌனம் கலக நாசம் என்பதன் கருத்து
(1) திறமையின் உயர்வு
(2) பாதுகாப்பு தீமையில் முடிதல்
(3) போலி நியாயம்
(4) மௌனத்தின் சிறப்பு (............)

24. அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடலாமா
(1) தகாத ஆசையின் கெடுதல்
(2) ஆசை மயக்கம்
(3) நன்றி மறவாமை
(4) முன்மாதிரியாக இருத்தல் (..........)

25. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
(1) முன்னெச்சரிக்கை
(2) மனத்திருப்பதி
(3) போலியைக் கண்டு மயங்கேல்
(4) இயற்கையை மாற்ற முடியாது (..........)

- **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் ஒத்த கருத்தை தெரிவுசெய்து அதனைக் குறிக்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** (05 புள்ளிகள்)

26. தனியுரிமை
(1) ஏகபோகம் (2) ஏகாதிபத்தியம் (3) ஏகமனம் (4) ஒய்யாரம் (............)

27. புரவி
(1) யானை (2) தேர் (3) குதிரை (4) படை (............)

28. அடிசில்
(1) கனிகள் (2) தங்குமிடம் (3) உணவு (4) பானம் (............)

29. உன்னதம்
(1) உவகை (2) மேன்மை (3) உரிமை (4) மகிழ்ச்சி (............)

30. ஓம்படை
(1) சபாமண்டபம் (2) கட்டமைப்பு (3) பாதுகாப்பு (4) மருந்து (............)

- **31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள இடைவெளி ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தனிச் சொல்லைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** (05 புள்ளிகள்)

31. வெளிப்படையாக புகழ்ந்தும் குறிப்பாக இகழ்ந்தும் கூறுவது ........................ எனப்படும்

(1) மடக்கு (2) அங்கதம் (3) முரண்தொடை (4) சால்பு (............)

32. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு ......................... செய்தது.

(1) பரிந்துரை (2) கட்டளை (3) கோரிக்கை (4) வேண்டுகோள் (...........)

33. ஜனாதிபதித் தேர்தலுக்காக சுயேச்சைக்குழு கட்டிய ...................... தை இழந்தது.

(1) சம்பளம் (2) கட்டுப்பணம் (3) கூலிப்பணம் (4) வாடகைப்பணம் (............)

34. தொன்று தொட்டு வழங்கி வரும் முறைமை .................................... ஆகும்

(1) ஒப்புரவு (2) மரபு (3) சுயம்பு (4) சால்பு (.............)

35. நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி ................... எனப்படும்

(1) கணவாய் (2) குகை (3) சுருங்கை (4) பதுங்குகுழி (.............)

36. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

இலக்கியம் யாருக்காக? அல்லது இலக்கியத்தின் பயன்பாடுகள் யாவை எனும் மிகப் பழமை வாய்ந்த வினாக்கள் உள்ளன. ஆனால் இதற்கு விடைதேடும், விழலுக்கு நீர் இறைக்கும் முயற்சியில் நான் இறங்கப் போவதில்லை. நல்ல இலக்கியங்களை நுகர்வோர்களுக்கு இலக்கியத்தின் பெறுமதியும் அது இயல்பான மனித வாழ்வோடு கொண்டுள்ள ஊடாட்டமும் தெரியவரும். நாம் ஆழமான இலக்கியங்களை வாசிக்கும் போது அதனை நயந்து கவனமாகப் பல தடவைகள் வாசித்து அதன் பலங்களையும் பலவீனங்களையும் பரிசீலனை செய்து இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்கிறோம். இலக்கியங்கள் நம் உணர்வுப் புலன்களை கிளர்த்து புரிந்துணர்வோடு வருடி விடுகின்றன. இலக்கியத்தோடு ஊடாடி நாம் பெற்றுக்கொள்ளும் நல்லனுபவங்களும் கற்றறிவும் வேறெந்த ஊடக வழியாகவும் பெற்றுக்கொள்ள முடியாததாகும். ஆகவேதான் நாம் மேலும் மேலும் உயர்தரம் வாய்ந்த இலக்கியங்களை நம்முடன் உள்வாங்கிக் கொள்ளவேண்டும் என்பதாகிறது.

ஆழமான இலக்கியங்களோடு நாம் பரிச்சயங்கொள்ளும் போது நமது சொந்த வாழ்வின் அகக் காட்சிக்குள் நுழைய முனைவோம். மனித வாழ்வுக்கு இலக்கியங்கள் புதிய அனுபவங்களைக் கொண்டு சேர்ப்பதாக அமைகின்றன. இலக்கியத்தின் பிரகாச ஒளிக்கிரணங்கள் மனித உயிர்கள் மீது கவனம் குவிக்கும் போது நமக்கு மனித இயல்புகள் குறித்த ஆழமான புரிதல்களை ஏற்படுத்தும் மனவெழுச்சி அனுபவங்களை நமக்குள்ளேயே காண்பதற்கான வாய்ப்பினைத் தருகின்றது. நமது அன்றாட வாழ்வில் பௌதீக மற்றும் உளவெழுச்சிப் பிரச்சினைகளையும் கஷ்ட நஷ்டங்களையும் காணுகிறோம். இலக்கியங்கள் அவற்றின் இயல்புகள் குறித்த ஆழமான தெளிவுகளை ஏற்படுத்தி அவற்றை சரிவர எதிர்கொள்ள உதவிசெய்கின்றன.

பல்வேறு ஆசாபாசங்களாலும் எதிர்பார்ப்புக்களாலும் கவர்ச்சிகளாலும் சாதாரண மனிதர்கள் என்ற வகையில் மனித வாழ்வு சுமையேற்றப்பட்டிருக்கின்றது. எனவே மனிதன் தனித்து வாழ முடியாமல் மற்றவர்களின் ஒத்துழைப்பினை நாடிக் கொள்கின்றான். அதன் காரணமாக மனித பிணைப்புக்களின் பண்புகளும் நடத்தைகளும் ஆழமானதாகவும் கூர்மையானதாகவும் அமைந்து விடுகின்றன. அதன் பல்வகைமை வாழ்வோடு இணைந்த திசையை வடிவமைப்பதாக அமைகின்றது. இலக்கியங்கள் வாழ்வை புரிந்து கொள்ளத்தக்க தேவையான உண்மையான அனுசரணைகளை பெற்றுத்தருகின்றன. நமது வாழ்க்கைக் கப்பல் நகரும் போது அனர்த்தங்களுக்கும் எதிர்பாராத புயல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியதாக

உள்ளது. அதனை வெற்றி கொள்வதற்கான பற்றுக்கோளினையும் வலுவினையும் வழிவகைகளையும் இலங்கியங்கள் நமக்குப் பெற்றுத்தருவதாக அமைகின்றன. எதிர்பார்ப்புக்கள் பொடியாகும் போதும் மயக்கநிலைகள் ஏற்படும்போதும் தர்க்கரீதியான சிந்தனை இருக்கவில்லையாயின் அங்கு மனித உறவுக் கோலங்களில் சடுதியான நிலைமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் இலக்கிய நுகர்வு இருப்பின் மாத்திரமே வாழ்க்கையானது தடைப்படாமல் செம்மையாகத் தொடர அது உயிர்த்துணையாக இருக்கும்.

பொதுவாக ஒரு சிலருக்கு மாத்திரமே விதிவிலக்கான திறன்கள் கொண்டு இலக்கியப் படைப்பு முயற்சிகளில் இயங்க முடியும். அத்தகையோர் பிறப்பிலேயே அத்தகைய திறன்களையும் உள் உணர்வுகளையும் கொண்டு உலக ஞானத்தைப் பெற்று சிறந்த கலைப்படைப்புக்களை வழங்கும் தன்னார்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். அத்தகைய மேலான ஆளுமைகளுக்கு அவர்கள் மானுடத்திற்கு வழங்கிய சிறந்த பங்களிப்புக்காக இன்று அரச இலக்கிய விருந்தளித்து கௌரவிக்கின்றோம்.

(i). இலக்கியங்கள் எமக்குள் எவற்றைத் தூண்டுகின்றன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ii). மனித வாழ்வை விளங்கிக் கொள்வதற்கு இலக்கியங்கள் எவ்வகையில் துணைபுரிகின்றன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(iii). வாழ்க்கைப் பாதையினைத் தடைகளின்றி மேம்படுத்துவதற்கு இலக்கியங்கள் எவ்வகையில் பங்களிப்புச் செய்கின்றன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(iv). ஒவ்வொருவரும் தனிமனிதர் என்ற வகையில் பிறரின் ஒத்துழைப்பினை நாடவேண்டியதன் தேவை யாதென கூறப்பட்டுள்ளது.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(v). சிறந்த கலைப்படைப்புக்களை உருவாக்கும் எழுத்தாளர்களின் ஆளுமைப் பண்புகள் என கூறப்படுபவை யாவை?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

**37. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை மூன்றில் ஒருபகுதியாகச் சுருக்கி எழுதுக. சுருக்கத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக. சுருக்கத்தின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கையை இடுக.**

**(20 புள்ளிகள்)**

சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி நிலை மாணவர்கள் தமது நேரத்தை பல பணிகளுக்காக செலவிட வேண்டியுள்ளது. பாடசாலை நாளொன்றில் இத்தகைய மாணவர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வழக்கமான தொழிற்பாடுகள் பாடசாலைச் செயற்பாடுகள் பாடசாலைக்குச் சென்று வருதல், பாடசாலைக்குப் பின்னரான புறக்கலைத்திட்ட தொழிற்பாடுகள், மேலதிக வாசிப்பு, வீட்டு வேலை, குடுபத்தினரோடு காலங்கழித்தல், சிபார்சு செய்யப்பட்ட அளவு நித்திரை என்பன அடங்கும். இங்கு தனியார் ரியூசன் வகுப்புகளுக்குச் செல்வது கருத்தில் எடுக்கப்படவில்லை.

இன்று பாதைகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக மாணவர் ஒருவர் பாடசாலை சென்று வர எடுக்கும் நேரம் கணிசமான அளவுக்கு வேறுபடலாம். வாத்தியக்குழு, விளையாட்டுக்கள், இலக்கிய, நடன, நாடக சங்கீத மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் போன்ற பாடசாலை நேரத்திற்குப் பின்னரான புறக்கலைத்திட்டத் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலானது மாணவர்களுக்கு தமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சேமநலனிலும் எதிர்கால தொழில் வாய்ப்புக்களிலும் பெரிதும் பயன்தருவதாக இருக்கும். இவ்வாறான தொழிற்பாடுகளில் தொடர்ந்து பங்குபற்றுவதற்கு நேரம் தேவைப்படும். மேலதிக வாசிப்பானது அது நாவல்களாகவோ செய்திகளாகவோ விஞ்ஞானக் கட்டுரைகளாகவோ கவிதைத் திறனாய்வுகளாகவோ இருப்பினும் பதின்ம வயது மாணவர்களில் புலக்காட்சிகளை உருவாக்கவும் அறிவாற்றலை மேம்படுத்தவும் சிந்தனா திறனை வலுப்படுத்தவும் உதவும். ஆகவே தினந்தோறும் மேலதிக வாசிப்பில் சிறிதளவு நேரத்தைத்தான் கழித்தாலும் அது ஒருவருடைய வாழ்க்கையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

உலகிலுள்ள அனைத்துக் கல்வியியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாவிடினும் வீட்டுவேலை எனும் செயற்பாடு மாணவர்களுக்கு பல வழிகளில் அவசியமானது, முக்கியமானது எனப் பலரும் நம்புகின்றனர். குறிக்கோளுடன் கூடிய வீட்டு வேலைகள் உண்மையாகவே மாணவர்களை கற்றலில் ஈடுபடச்செய்து புதிய எண்ணக்கருக்களை புரிந்து கொள்வதை ஊக்குவிப்பதோடு விடய உள்ளடக்கம் பற்றிய ஆழமான புரிதலை அவர்களிடம் ஏற்படுத்தும். அத்தோடு சுயமாகக் கையாளக்கூடிய திறன்களை விருத்திசெய்துகொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும். மேலும் ஒழுங்காக வீட்டுவேலைகளைச் செய்வதானது பரீட்சைகளில் மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்துவது நிச்சயம்.

பெற்றோர்களுடன் இணைந்து பண்புத்தரமுள்ள விதத்தில் குடும்பமாக நேரத்தைக் கழிக்கும் பிள்ளைகள் பெருமளவு நன்மைகளைப் பெறுகின்றனர் என்பதைச் சிலநாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் நிலைபேறான பிணைப்பொன்றை உருவாக்குதல் குடும்ப அங்கத்தவர்கள் தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த வசதியளிததல், பாடசாலையில் உயர்தரமான கல்விசார் செயல்திறனை வெளிப்படுத்தல் என்பன இவற்றுள் அடங்கும்.

பதின்ம வயதினரைப் பொறுத்தமட்டில் அவர்களது உரிய முறையிலான வளர்ச்சிக்கு போதியளவு நித்திரை, மிக மிக முக்கியம் என நிபுணர்கள் கூறுகின்றனர். சாதாரண பதின்ம வயதினர் ஒருவர் ஒவ்வொரு இரவிலும் ஆகக் குறைந்தது 8.5 முதல் 9.00 மணித்தியாலங்கள் வரை நித்திரை கொள்ள வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

38. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 300 சொற்களில் பகுப்பாய்வுக் கட்டுரை ஒன்றை வரைக.

(30 புள்ளிகள்)

01. இறக்குமதிக் கட்டுப்பாடும் இலங்கையின் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்.
02. நீதித் துறையின் தன்னாதிக்கத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்
03. போதைவஸ்துப் பாவனையும் இளந்தலைமுறையினரும்
04. கல்வியின் தராதரமும் நிகழ்நிலைக் கற்றலும>

සියලුම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All rights reserved

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය/இலங்கைச் சட்டக்கல்லூரி/Sri Lanka Law College

இலங்கைச் சட்டக்கல்லூரி அனுமதிப்பதற்கான பொதுப் பரீட்சை - 2022 நவெம்பர்

## (02)–பொது அறிவும் நுண்ணறிவும்

மூன்று மணித்தியாலங்கள்

### பகுதி I – பொது அறிவு

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

உமது சுட்டெண்ணை புள்ளிக்கோட்டில் மட்டும் எழுதுக.

.......................................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

...............................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம் :

* பாட இலக்கம் (02) பொதுஅறிவும் நுண்ணறிவும் வினாத்தாளானது பகுதி I பொது அறிவு, பகுதி II நுண்ணறிவு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
* இரு பகுதிகளுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்கள் ஆகும்.
* பகுதி I – பொது அறிவு வினாத்தாள் 08 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
* சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடைகளை எழுதுக.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குதல் வேண்டும்.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
* விடைகள் எழுதப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

கறுப்பு அல்லது நீல நிறப் பேனாவினால் மாத்திரம் விடைகளை தெளிவாக எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

* இவ் வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்துக்கு வெளியே கொண்டு செல்லல் அல்லது அதன் ஒளிக்காட்சியை (photo shots) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* தெளிவற்ற இலக்கங்கள், தெளிவற்ற கையெழுத்து, மற்றும் அழிக்கும் திரவத்தை பயன்படுத்தியிருத்தல் ஆகியவற்றைக் கொண்ட விடைத்தாளுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 01-08 | |
| 3 | 09-16 | |
| 4 | 17-24 | |
| 5 | 25-31 | |
| 6 | 32-40 | |
| 7 | 41-50 | |
| 8 | 51-60 | |
| | மொத்தம் | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீசித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

- **1 - 40** வரையான வினாக்களுக்கு சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீங்கள் கருதும் விடையைத் தெரிவு செய்து குறித்த விடைக்குரிய **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

1. புவி உச்சி மாநாட்டின் பிரதான கருப்பொருள் யாது?
   (1) ஓசோன் படலத்தின் பாதுகாப்பு
   (2) மனிதனும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும்
   (3) பௌதீகச் சூழலின் நிலைத்த தன்மை
   (4) வனவிலங்குகளையும் காடுகளையும் பாதுகாத்தல் (.........)

2. கொழும்பில் துறைமுகத்தைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் தீப்பற்றி எரிந்து சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்திய "எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பல் பதிவு செய்யப்பட்ட நாடு எது?
   (1) ஜேர்மனி (2) சீனா
   (3) சிங்கப்பூர் (4) ஜப்பான் (.........)

3. உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி, உலகில் மிகவும் மகிழ்ச்சியான மக்கள் வாழும் நாடு எது?
   (1) சுவீடன் (2) நோர்வே
   (3) நியூசிலாந்து (4) பின்லாந்து (.........)

4. உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, தென் ஆசியாவில் குறைந்த கர்ப்பிணித் தாய்மார் இறப்பு வீதத்தைக் கொண்ட நாடு எது?
   (1) இலங்கை (2) நேபாளம்
   (3) பாகிஸ்தான் (4) இந்தியா (.........)

5. 2016 ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பிரஜை ஒருவரினால் கோரப்படும் தகவல்களை எத்தனை நாட்களுக்குள் வழங்குதல் வேண்டும்?
   (1) 07 நாட்களுக்குள் (2) 10 நாட்களுக்குள்
   (3) 14 நாட்களுக்குள் (4) 18 நாட்களுக்குள் (.........)

6. கொவிட் 19 தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக உலகின் பெரும்பாலான நாடுகளால் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி எது?
   (1) அஸ்ரா செனிக்கா (2) பைசர்
   (3) சினோபாம் (4) ஜான்சென் (.........)

7. ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின்படி 2023 ஆம் ஆண்டில் எந்த நாடு உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு என அறிவிக்கப்படலாம் என நம்பப்படுகிறது?
   (1) இந்தியா (2) சீனா
   (3) அமெரிக்கா (4) ரஷ்யா (.........)

8. ஒக்ரோபர் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உலக சனத்தொகையில் எத்தனை மில்லியன் மக்கள் கொரோனாத் தொற்று நோயினால் இறந்துள்ளனர்?
   (1) 4.6 (2) 6.5
   (3) 8.2 (4) 9.7 (.........)

9. புரட்டாதி மாதம் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய கிரிக்கட் மற்றும் வலைப்பந்து இறுதிப் போட்டிகளில் முறையே எந்தெந்த நாடுகளை தோற்கடித்து இலங்கை இவ் வெற்றிகளைப் பெற்றுக்கொண்டது?

(1) பாகிஸ்தான் மற்றும் ஜப்பான்
(2) இந்தியா மற்றும் மாலைதீவு
(3) பங்களாதேஷ் மற்றும் சிங்கப்பூர்
(4) பாகிஸ்தான் மற்றும் சிங்கப்பூர் (………)

10. 2022 FIFA உலகக்கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டி எந்த நாட்டில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது?

(1) பிரேசில் (2) ஆர்ஜென்ரீனா
(3) கட்டார் (4) அமெரிக்கா (………)

11. எந்தப் புராணத்தின் படி சட்டம் மற்றும் ஒழுங்கு கடவுளினுடைய அடையாளத்திலிருந்து உருவானதாகக் கருதப்படுகின்றது?

(1) ரோமன் (Roman) (2) கிரேக்கம் (Greek)
(3) மிசரே (Misaray) (4) பேர்சியன் (Persian) (………)

12. இயற்கை அனர்த்தங்கள் போராட்டங்கள் மற்றும் யுத்தங்களின் போது பொது மக்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் சட்டம் எது?

(1) சிவில் உரிமைச் சட்டம் (2) போர்ச் சட்டம் (Law of war)
(3) மார்ஷல் சட்டம் (MarshalLaw) (4) அவசரகாலச் சட்டம் (………)

13. பின்வருவனவற்றுள் இயற்கை விதி தொடர்பான தவறான கூற்று எது?

(1) இயற்கை விதி ஒழுக்கத்துக்கு மிகவும் நெருக்கமானது.
(2) இயற்கை விதி மனிதர்களால் ஆக்கப்பட்ட சட்டங்களுக்குச் சமனானது.
(3) மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டம் இயற்கை விதிக்கு முரணானதாக இருந்தால் செல்லுபடியற்றதாகும்.
(4) மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டம் இயற்கை விதியை மீற முடியாது.(………)

14. மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தின் எந்தச் சரத்து, சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்பதை உறுதி செய்கிறது?

(1) இரண்டாவது சரத்து (2) நான்காவது சரத்து
(3) ஏழாவது சரத்து (4) எட்டாவது சரத்து (………)

15. எந்த நாட்டின் உச்ச நீதின்றம் "Roe vs. Wade" வழக்கினூடாக 50 வருட கால கருக் கலைப்பு உரிமையை மாற்றியமைக்கும் தீர்ப்பை 2022 இல் வெளியிட்டது?

(1) அமெரிக்கா (2) ஐக்கிய இராச்சியம்
(3) ஈராக் (4) சுவீடன் (………)

16. இலங்கையில் உள்ள சட்டங்களின்படி, ஒருவர் பாலியல் குற்றவாளியென உறுதி செய்யப்பட்டாலும் குறித்த நபருக்கெதிராக நீதிமன்ற சட்ட நடவடிக்கையை எடுக்கக்கூடிய குறைந்தபட்ச வயது யாது?

(1) 8 வருடங்கள் (2) 12 வருடங்கள்
(3) 16 வருடங்கள் (4) 18 வருடங்கள் (………)

17. கீழே தரப்பட்டுள்ள உயிர்களின் தோற்றம் பற்றிய அறிவுடன் தொடர்புடைய கூற்றுக்களில் மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க கூற்று எது?

(1) காஸ்மேஜெனிசிஸ் இன் கருத்து (உயிர் அண்டவெளியில் இருந்து வந்தது)
(2) தெய்வீகத் தோற்றக் கருத்து (உயிர் கடவுளால் உருவாக்கப்பட்டது)
(3) தன்னிச்சையான தலைமுறையின் கருத்து
(4) பரிணாம வளர்ச்சிக் கருத்து (உயிர் வேதியியல்) (.........)

18. அல்பேர்ட் ஐன்ஸ்டீன் அவர்களால் விருத்திசெய்யப்பட்ட கோட்பாடு எது?

(1) பரிணாமக் கோட்பாடு (Theory of Evolution)
(2) சார்பியல்க் கோட்பாடு (Theory of Relativity)
(3) உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு (Theory of Psycho-analysis)
(4) நடைமுறைவாதக் கோட்பாடு (Theory of Pragmatism) (.........)

19. உயிர்வாயு எரிபொருளில் உள்ளடங்கியுள்ள பிரதான வாயு எது?

(1) எதனே (Ethane) (2) கெக்ஸேன் (Hexane)
(3) கலோதன் ( Halothane) (4) மீதேன் (Methane) (.........)

20. அமெரிக்காவில் சட்டம் மற்றும் அமைதியின் சின்னமாக விளங்கும் சுதந்திர தேவியின் சிலையை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட உலோகம் எது?

(1) வெள்ளி (Silver) (2) ஈயம் (Lead)
(3) கொப்பர் (Copper) (4) இரும்பு (Iron) (.........)

21. ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களுடைய அரசாங்கம் என யாரால் விளக்கப்பட்டது?

(1) ஆபிரகாம் லிங்கன் (2) அரிஸ்ரோட்டில்
(3) நெல்சன் மண்டேலா (4) நிக்கோலா மக்கியாவெல்லி (.........)

22. எத்தனையாம் ஆண்டுவரை ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாம் எலிசபெத் மகாராணி இலங்கையின் தலைவராகக் கருதப்பட்டார்?

(1) 1931 (2) 1948
(3) 1972 (4) 2022 (.........)

23. இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று எது?

(1) இந்தியாவின் 15 ஆவது குடியரசுத் தலைவர்
(2) பழங்குடிச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாவது குடியரசுத் தலைவர்
(3) கிழக்கு ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர்
(4) இந்தியாவின் முதற் பெண்மணி (.........)

24. இலங்கைக்குச் சொந்தமான எந்தத் தீவினை மீட்டெடுக்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.?

(1) நெடுந்தீவு (2) கச்சதீவு
(3) இரணைதீவு (4) நயினாதீவு (.........)

25. உலக அமைதிக்கான உலகளாவிய அமைப்பினை ஸ்தாபிப்பதற்கான ஆலோசனையை முன்வைத்த மூன்று நாடுகளும் எவை?

(1) பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி
(2) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, சோவியத் ரஷ்யா
(3) சீனக்குடியரசு, சோவியத் ரஷ்யா, ஜப்பான்
(4) ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் (………)

26. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைச் சமவாயத்தின் சர்வதேசப் பிரகடனத்தின்படி எந்த வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர்?

(1) 12 வருடங்கள் (2) 14 வருடங்கள்
(3) 16 வருடங்கள் (4) 18 வருடங்கள் (………)

27. அரசியலமைப்பின் எந்தத் திருத்தச் சட்டம் இரட்டைப் பிரஜா உரிமையுடையவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை வழங்கியது?

(1) 13 வது திருத்தச் சட்டம் (2) 17 வது திருத்தச் சட்டம்
(3) 19 வது திருத்தச் சட்டம் (4) 20 வது திருத்தச் சட்டம் (………)

28. கீழே தரப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் திறந்துவைக்கப்பட்ட காற்றலை மின் உற்பத்தி நிலையம் எது?

(1) பவண்டானவி (Pavandanavi) (2) லக் விஜய (Lak Vijaya)
(3) யுகடனவி (Yugadanavi) (4) தம்பபவனி (Thambapavani) (………)

29. மனிதன் மற்றும் விலங்குகள் இரண்டுக்கும் சமமான நீதியுடன் ஆட்சிபுரிந்த இலங்கையின் பண்டைய புகழ்பெற்ற அரசன் யார் ?

(1) எல்லாள (Ellara) (2) தாதுசேனன் (Dhathusena)
(3) மகாசேனன் (Mahasen) (4) புத்ததாச (Buddhadasa) (………)

30. இலங்கைத்தீவின் நிர்வாக மற்றும் நீதித்துறை முறைமையை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு எது?

(1) கெர்பெற்வேஸ் ஆணைக்குழு (Herbetweiss Commission)
(2) மோர்கன் ஆணைக்குழு (Morgan commission)
(3) கோல்புறூக் ஆணைக்குழு (Colebrook commission)
(4) மக்கிய ஆணைக்குழு (Mackay commission) (………)

31. எந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் இலங்கையின் நீதி மன்றத்தினால் குற்றமிழைத்தவராகத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் பிரித்தானியாவின் தனியுரிமைக் கவுன்சிலுக்கு (Privy Council) மேன்முறையீடு செய்யும் உரிமையை இல்லாமற் செய்தது?

(1) 1931 டொனமூர் அரசியலமைப்பு (2) 1947 சோல்பரி அரசியலமைப்பு
(3) 1972 அரசியலமைப்பு (4) 1978 அரசியலமைப்பு (………)

32. புலனாய்வு நடவடிக்கைகளின் போது சந்தேக நபர்களிடமிருந்து சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள எந்த வகையான அவதானம் மிகக் கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடியது?

(1) நேரடி அவதானிப்பு (2) பங்குபற்றுதல் அவதானிப்பு
(3) மறைமுக அவதானிப்பு (4) பொருட்களை அவதானித்தல் (.........)

33. எந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கிராம சபைகளின் (village Councils) அதிகாரங்கள், கடமைகளை இல்லாது செய்து அவற்றை நீதிமன்றங்களுக்குக் கையளித்தது

(1) கோல்புறூக் சீர்திருத்தங்கள் (2) கமெரன் சீர்திருத்தங்கள்
(3) மோர்கன் சீர்திருத்தங்கள் (4) மெனிங் சீர்திருத்தங்கள் (.........)

34. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின்(UNICEF) 2022 ஆகஸ்ட் வரையான மதிப்பீட்டின்படி போசாக்கின்மையில் இலங்கையானது எத்தனையாவது இடத்தில் உள்ளது?

(1) இரண்டாவது இடத்தில் (2) நான்காவது இடத்தில்
(3) ஆறாவது இடத்தில் (4) எட்டாவது இடத்தில் (.........)

35. டிஜிற்றல் மயமாக்கலை (Digitalization) அடிப்படை மனித உரிமையாகப் பிரகடனம் செய்த நாடு எது?

(1) கொரியா (2) பிரான்ஸ்
(3) பிலிப்பைன்ஸ் (4) பின்லாந்து (.........)

36. 2022 இல் இலங்கையிலும் நினைவு கூரப்பட்ட சர்வதேச யோகாதினம் எந்தத் திகதியில் கொண்டாடப்படுகிறது?

(1) மே 22 (2) யூன் 21
(3) ஒக்டோபர் 6 (4) டிசம்பர் 10 (.........)

37. இந்தியாவின் எந்த மானிலத்தில் 2022 ஆம் ஆண்டு தீபாவளிக் கொண்டாட்டத்தின்போது பாலம் இடிந்து விழுந்ததில் அதிக எண்ணிக்கையான உயிரிழப்புகள் ஏற்பட்டது?

(1) குஜராத் (2) ராஜஸ்தான்
(3) சென்னை (4) பீகார் (.........)

38. இலங்கைப் பேராசிரியரால் உருவாக்கப்பட்ட கொவிட் நோயைக் கண்டறியும் செயலியை வாங்கிய நிறுவனம் எது?

(1) சினோபாம் (Sino Pharm) (2) ஜான்ஸ்சென் (Janssen)
(3) பைசர் (Pfizer) (4) கமலேயா (Gamaleya) (.........)

39. ஒரு சர்வதேச அமைப்பில் சேர்ந்து கொள்ள உக்ரைன் மேற்கொண்ட முயற்சியே ரஷ்ய - உக்ரைன் மோதலுக்கான பிரதான காரணமாகும். உக்ரைன் சேர்ந்துகொள்ள முயற்சித்த அவ் அமைப்பு எது?

(1) NATO (2) OPEC
(3) WARSAW (4) GATT (.........)

40. 1815 இல் ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட கண்டிய உடன்படிக்கையை உள்ளூர் தலைவர்களுக்கு சிங்கள மொழியில் விளக்கிய ஆங்கிலேய ஆளுநரின் பெயர் என்ன?

(1) ஜோன் டொய்ல் (2) ரொபேர்ட் பிறௌன்றிக்
(3) பிரெட்றிக் நோத் (4) ரொபேர்ட் வில்லியம் கோர்ட்டன் (.........)

- 41 - 60 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமான விடை தருக.

41. சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது தொடர்பாக 1971 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையினை அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்படும் சுருக்கப் பெயர் யாது?

.................................................................................................................................

42. ஆரம்பத்தில் அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட போதும் இலங்கையின் மத்திய நெடுஞ்சாலை அமைப்புப் பணிகளின்போது கண்டறியப்பட்டு, இன்னமும் பேணிப்பாதுகாக்கப்படும் மரத்தின் பெயர் என்ன?

.................................................................................................................................

43. பாம் எண்ணை (Palm oil) உற்பத்திக்கு முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் மரத்தின் பெயர் என்ன?

.................................................................................................................................

44. இலங்கையின் தற்போதைய அண்ணளவான சனத்தொகையை மில்லியனில் (millions) தருக?

.................................................................................................................................

45. 2022 ஆம் ஆண்டு எந்த நாட்டின் காற்பந்தாட்ட மைதானத்தில் சனநெரிசலில் சிக்கி பெரும் எண்ணிக்கையானவர்கள் உயிரிழந்தனர்?

.................................................................................................................................

46. ஒரு நிறுவனத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை விசாரித்து அந்தப் புகார்களுக்குான தீர்வுகளை வழங்க இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பதவியைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

47. "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயலணியினுடைய தலைவரின் பெயர் என்ன?

.................................................................................................................................

48. மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடம், திகதி எது?

.................................................................................................................................

49. 2022 இல் இலங்கையை விட்டு வெளியேற இலங்கை நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்ட ஏரோ ப்ளைட் (Aeroflot flight ) விமானம் எந்த நாட்டுக்குச் சொந்தமானது?

.................................................................................................................................

50. உள்நாட்டில் பாவனையிலுள்ள வீட்டுப்பாவனைக்கான எரிவாயுக் குவளையில் (Gas cylinder) பயன்படுத்தப்படும் இரண்டு வகையான எரிவாயுக்களும் எவை?

.................................................................................................................................

51. தீங்கு விளைவிக்கும் பக்ரீரியா காணப்படுவதாகக் கண்டறியப்பட்டதனைத் தொடர்ந்து சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யத் தடைவிதிக்கப்பட்ட இயற்கை உரத்தினை (Organic fertilizer) உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர் என்ன?

..............................................................................................................................

52. 2022 இல் சீனாவின் ஆட்சிக்கு கொங்கொங் (Hong Kong) மீளத் திரும்பியதைக் குறிக்கும் விதமாகக் கொண்டாடப்பட்ட கொண்டாட்டம் எது?

..............................................................................................................................

53. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர மோதல் ஏற்படக் காரணமாக அமைந்த 2022 இல் இலங்கைக்கு வந்த சீன ஆராய்ச்சிக் கப்பலின் பெயர் என்ன?

..............................................................................................................................

54. சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாடு மற்றும் நகரத்தின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

55. 16 யூன் 2022 இல் குறிப்பிடப்பட்டபடி உள்நாட்டில் வசிப்போர் அதிகபட்சமாக வைத்திருக்கக்கூடிய அமெரிக்க டொலரின் அளவு யாது?

..............................................................................................................................

56. “மூன்றாம் உலகிலிருந்து முதலாம் உலகுக்கு” என்ற நினைவுக் குறிப்பு நூலை எழுதிய நூலாசிரியரின் பெயர் என்ன?

..............................................................................................................................

57. ” போரும் சமாதானமும் (War and Peace) என்ற உலகப் புகழ்பெற்ற நாவலை எழுதிய நாவலாசிரியரின் பெயரைத் தருக.

..............................................................................................................................

58. ஒரு கொலையாளியால் சுட்டுக் கொல்லப்பட்ட ஜப்பானின் நீண்டகால பிரதமரின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

59. க.பொ.த உயர்தர தகைமையானது தேசிய தொழிற்த் தகைமைச் சட்டகத்தின் (NVQ) எந்த மட்டத்துக்குச் சமமானது?

..............................................................................................................................

60. இலங்கையில் உள்ள சட்டத்தின்படி எந்த வயதுக்குக் குறைந்தவர்களுக்கு மதுபானத்தை விற்பனை செய்வது சட்ட விரோதமானது?

..............................................................................................................................

සියලුම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All rights reserved

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය/இலங்கைச் சட்டக்கல்லூரி/Sri Lanka Law College

இலங்கைச் சட்டக்கல்லூரி அனுமதிப்பதற்கான பொதுப் பரீட்சை - 2022 நவெம்பர்

## (02)–பொதுஅறிவும் நுண்ணறிவும்

### பகுதி II– நுண்ணறிவு

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

உமது சுட்டெண்ணை புள்ளிக்கோட்டில் மட்டும் எழுதுக.

.........................................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம்:

- பாட இலக்கம் (02) பொதுஅறிவும் நுண்ணறிவும் வினாத்தாளானது பகுதி I பொது அறிவு, பகுதி II நுண்ணறிவு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- இரு பகுதிகளுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்கள் ஆகும்.
- பகுதி II - நுண்ணறிவு வினாத்தாள் 12 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
- சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடைகளை எழுதுக.
- மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குதல் வேண்டும்.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- விடைகள் எழுதப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

கறுப்பு அல்லது நீல நிறப் பேனாவினால் மாத்திரம் விடைகளை தெளிவாக எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

- இவ் வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்துக்கு வெளியே கொண்டு செல்லல் அல்லது அதன் ஒளிக்காட்சியை (photo shots) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
- தெளிவற்ற இலக்கங்கள், தெளிவற்ற கையெழுத்து, மற்றும் அழிக்கும் திரவத்தை பயன்படுத்தியிருத்தல் ஆகியவற்றைக் கொண்ட விடைத்தாளுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1-10 | |
| 3 | 11-14 | |
| 4 | 15-19 | |
| 5 | 20-22 | |
| 6 | 23-25 | |
| 7 | 26-29 | |
| 8 | 30-33 | |
| 9 | 34-39 | |
| 10 | 40-47 | |
| 11 | 48-55 | |
| 12 | 56-60 | |
| | மொத்தம் | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

- இலக்கங்கள் 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் முதல் பகுதியில் தொடர்புடைய சோடிச் சொற்களையும் இரண்டாவது பகுதியில் சோடிச் சொற்களில் ஒரு சொல்லையும் கொண்டுள்ளன. முதல் சோடிச் சொற்களுக்கிடையே காணப்படும் தொடர்பு இரண்டாவது சோடிச் சொற்களில் காணப்படவேண்டுமாயின் தரப்பட்டுள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை அதற்கு எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.

1. குற்றம்: நீதிமன்றம்:: நோய்: .......

   (1) வைத்தியசாலை (2) கல்லறை (3) மருந்தகம் (4) ஆய்வகம் (............)

2. மழை: நீர்:: போட்டி: .........

   (1) வெற்றி (2) கோப்பை (3) பெறுபேறு (4) மகிழ்ச்சி (............)

3. காவல் நிலையம்: முறைப்பாட்டாளர்கள்:: வங்கி: .......

   (1) வங்கி ஊழியர்கள் (2) வைப்பாளர்கள் (3) வாடிக்கையாளர்கள் (4) பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (............)

4. வானவில்: நிறங்கள்:: புத்தகம்: ......

   (1) எழுத்துகள் (2) இலக்கங்கள் (3) உருக்கள் (4) பக்கங்கள் (............)

5. ரூபா: டொலர்:: மீற்றர்:: ......

   (1) கிலோமீற்றர் (2) சென்றிமீற்றர் (3) அங்குலம் (4) லீற்றர் (............)

- இலக்கங்கள் 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு சொற்கள் அவற்றின் கருத்தின் அடிப்படையில் குழுவாக கொள்ள முடியும் எனில் மிகுதியுள்ள ஒரு சொல்லை தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.

6. (1) காற்சட்டை (2) குடை (3) கைக்கடிகாரம் (4) மழைகோட் (5) தொப்பி (............)

7. (1) அழுதல் (2) திட்டுதல் (3) முறைத்தல் (4) சிரித்தல் (5) திருப்தியடைதல் (............)

8. (1) பாடசாலை (2) விகாரை (3) கோயில் (4) நீதிமன்றம் (5) சிறைச்சாலை (............)

9. (1) தேர்தல் (2) வாக்காளர் (3) பிரதிநிதித்துவம் (4) வாக்கு (5) ஆட்சி (............)

10. (1) சாரதி (2) ஆசிரியர் (3) வக்கீல் (4) தச்சர் (5) வைத்தியர் (............)

- இலக்கங்கள் 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் இரண்டு கூற்றுகளை கொண்டுள்ளன. இவை உண்மையற்றவையாக இருக்கலாம். எனினும் விடையளிக்கும் நோக்கத்திற்காக இவற்றை சரியான கூற்றுகளாக கொள்ள முடியும். அத்துடன் இவ்விரண்டு கூற்றுகளையும் அடிப்படையாகக் கொண்ட இரண்டு முடிவுகளும் கீழே தரப்பட்டுள்ளன. இவ்விரு முடிவுகளின் சரியான தன்மைபற்றி எடுக்கப்படக்கூடிய பின்வரும் தீர்மானங்களுள் சரியான தீர்மானத்தை தெரிவுசெய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.

A- முடிவு 1 மாத்திரம் சரியானது

B- முடிவு 2 மாத்திரம் சரியானது

C- ஒன்றில் முடிவு 1 அல்லது முடிவு 2 மாத்திரம் சரியானது

D- இரண்டு முடிவுகளும் தவறானவை

E- இரண்டு முடிவுகளும் சரியானவை

11. கூற்றுகள்: 1. சில ஆடைகள் காற்சட்டைகள்
2. சில காற்சட்டைகள் இறக்குமதிப் பொருட்கள்

முடிவுகள்: 1. சில ஆடைகள் இறக்குமதிப் பொருட்கள்
2. சில இறக்குமதிப் பொருட்கள் ஆடைகள்

இம் முடிவுகளைப் பற்றிய சரியான தீர்மானம்

(1) A (2) B (3) D (4) E (…………)

12. கூற்றுகள்: 1.சில ரோசா பூக்கள் சிவப்பு நிறம்
2. மஞ்சள் பூக்கள் ரோசா பூக்கள் அல்ல.

முடிவுகள்: 1. சில சிவப்பு பூக்கள் மஞ்சள் பூக்கள்
2.சகல மஞ்சள் பூக்களும் சிவப்பு பூக்கள்.

இம் முடிவுகளைப் பற்றிய சரியான தீர்மானம்

(1) A (2) B (3) C (4) D (…………)

13. கூற்றுகள்: 1.சகல ஓட்டுனர்களும் ஆண்கள்.
2. சில ஆண்கள் கற்றவர்கள்

முடிவுகள்: 1. சில ஓட்டுனர்கள் கற்றவர்கள்
2.சில கற்றவர்கள் ஆண்கள்

இம் முடிவுகளைப் பற்றிய சரியான தீர்மானம்

(1) A (2) B (3) D (4) E (…………)

14. கூற்றுகள்: 1.சில பேனாக்கள் பென்சில்கள்.
2. சகல பென்சில்களும் உள்ளூர் உற்பத்திகள்

முடிவுகள்: 1. சகல பேனாக்களும் உள்ளூர் உற்பத்திகள்
2.சகல பென்சில்களும் பேனாக்கள்

இம் முடிவுகளைப் பற்றிய சரியான தீர்மானம்

(1) A (2) B (3) D (4) E (…………)

15. கூற்றுகள்: 1. சகல அன்னாசிகளும் மாம்பழங்கள்
2. சகல ஆரஞ்சுகளும் மாம்பழங்கள்


முடிவுகள்: 1. சில ஆரஞ்சுகள் அன்னாசிகள்
2. எந்தவொரு ஆரஞ்சுகளும் அன்னாசிகள் அல்ல.

இம் முடிவுகளைப் பற்றிய சரியான தீர்மானம்

(1) A (2) B (3) C (4) D (...........)


இலக்கங்கள் 16 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து உருக்கள் தரப்பட்டுள்ளன. குறித்த இயல்பின் அடிப்படையில் இவற்றுள் ஒன்று ஏனைவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. இவ்வாறான பொருத்தமற்ற உருவினை தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அதற்கெதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.

16.




(1) (2) (3) (4) (5) (...........)

17.



(...........)


18.



(1) (2) (3) (4) (5)

(...........)


19.



(1) (2) (3) (4) (5)

(...........)


20.




(1) (2) (3) (4) (5) (............)

இலக்கங்கள் 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் முதலாவது பகுதியில் ஒரு சோடி உருக்களும் இரண்டாவது பகுதியில் சோடி உருக்களில் ஒரு உருவும் தரப்பட்டுள்ளன. முதலாவது சோடி உருக்களில் காணப்படும் அதே தொடர்பு இரண்டாவது சோடி உருக்களில் காணப்படவேண்டுமாயின் "?" என அடையாளமிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய உருவினை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அடைப்பினுள் எழுதுக.


21.






(1) (2) (3) (4) (............)


22.






(1) (2) (3) (4) (............)


23.






(1) (2) (3) (4) (............)


24.






(1) (2) (3) (4) (............)

25.






(1) (2) (3) (4) (............)


- இலக்கங்கள் 26 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு உருக்களிலுள்ள எண்களும் ஒரே கோலத்தில் அமைந்துள்ளன. இக் கோலத்தினை இனங்கண்டு "*" என அடையாளம் இடப்பட்டுள்ள கூட்டினுள் வரவேண்டிய இலக்கத்தினை அதற்கு எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.

26.





(1) (2) (3) (4) (...........)

27.





(1) (2) (3) (4) (...........)

28.





(1) (2) (3) (4) (...........)

29.




(1) (2) (3) (4) (...........)

30.




(............)

- இலக்கங்கள் 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் திங்கள் முதல் சனிக்கிழமை வரையான ஆறு நாட்களில் குற்றவியல் சட்டம், தொழில்துறைச் சட்டம், அரசியலமைப்பு சட்டம், சான்று சட்டம், கடமைச் சட்டம், மற்றும் சுற்றுச்சூழல் சட்டம் ஆகிய ஆறு பாடங்களுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்கு திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான கீழே தரப்பட்டுள்ள நான்கு நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டவை.

1. குற்றவியல் சட்டம் தொடர்பான பரீட்சையானது கடமைச் சட்டத்தின் பரீட்சை நாளுக்கு முதல் நாளில் நடாத்தப்படுதல் வேண்டும்.
2. சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் தொழில்துறைச் சட்டம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் அடுத்தடுத்த இரண்டு நாட்களுக்கு நடாத்தப்படுதல் வேண்டும்.
3. சான்று சட்டம் தொடர்பான பரீட்சையானது வெள்ளிக்கிழமை நடாத்தப்படுதல் வேண்டும்.
4. குற்றவியல் சட்டம் தொடர்பான பரீட்சையானது திங்கட்கிழமை நடாத்தப்படகூடாது அதேபோன்று குற்றவியல் சட்டம் மற்றும் தொழில்துறை சட்டம் ஆகிய பாடங்கள் தொடர்பான பரீட்சைகள் அடுத்தடுத்த இரண்டு நாட்களுக்கு நடாத்தப்படகூடாது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அதற்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.

31. அரசியலைப்பு சட்டம் தொடர்பான பரீட்சை நடாத்தப்பட வேண்டிய தினம் யாது?

(1) செவ்வாய் (2) புதன்

(3) வியாழன் (4) சனி (............)

32. கடமைச் சட்டம் தொடர்பான பரீட்சைக்கு அடுத்த நாள் வைக்கப்பட வேண்டிய பரீட்சை யாது?

(1) சுற்றுச்சூழல் சட்டம் (2) தொழில்துறை சட்டம்

(3) சான்று சட்டம் (4) அரசியலைப்பு சட்டம் (............)

33. தொழில்துறை சட்டம் தொடர்பான பரீட்சைக்கு அடுத்த நாள் வைக்கப்பட வேண்டிய பரீட்சை யாது?

(1) அரசியலைப்பு சட்டம் (2) சான்று சட்டம்,

(3) கடமைச் சட்டம் (4) சுற்றுச்சூழல் சட்டம் (............)

34. எந்தப்பாடம் தொடர்பான பரீட்சை திங்கட்கிழமை நடாத்தப்படவேண்டும்?

(1) தொழில்துறை சட்டம் (2) அரசியலைப்பு சட்டம்

(3) கடமைச் சட்டம், (4) சுற்றுச்சூழல் சட்டம் (............)

35. மேற்படி நிபந்தனைகளுள் நான்காவது நிபந்தனை நீக்கப்பட்டு "சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கடமைச் சட்டம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் அடுத்தடுத்த இரண்டு நாட்களுக்கு நடாத்தப்பட வேண்டும்" என்ற புதிய நிபந்தனை சேர்க்கப்படின் குற்றவியல் பரீட்சை நடாத்தப்படவேண்டிய தினம் யாது?

(1) திங்கள் (2) செவ்வாய்

(3) புதன் (4) வியாழன் (............)

- இலக்கங்கள் 36 தொடக்கம் 40 வரையான வினாக்கள் P,Q,R,S,T,U மற்றும் V ஆகிய ஏழு நபர்கள் மீதான பண மோசடி, போதைப் பொருள் கடத்தல், கொலை, வாகனத் திருட்டு, தாக்குதல், பொதுச்சொத்து துஷ்பிரயோகம் மற்றும் கப்பம் கேட்டல் போன்ற ஏழு குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக் கொண்டவை.

  - ஒவ்வொரு நபரும் ஒரு குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.
  - இவர்களுள் இருவர் சகோதரர்கள், இருவர் சகோதரிகள், எஞ்சியுள்ள இருவரும் தந்தையும் மகனும்.
  - U குடும்பத்தில் U வைத் தவிர யாரும் இல்லை.
  - V க்கு சகோதர சகோதரிகள் என யாரும் இல்லை.
  - R என்பார் T இன் மூத்த சகோதரர் அத்துடன் அவர் தாக்குதல் மேற்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.
  - வாகனத் திருட்டு குற்றச்சாட்டுக்கு உள்ளான P கொலைக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் மூத்த சகோதரி.
  - Q பணமோசடி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.
  - கப்பம் கேட்டல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக U குற்றஞ் சாட்டப்படவில்லை.

மேற்படி தகவல்களிலிருந்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அதற்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.

36. எந்த இருவர் நிச்சயமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்?

(1) Q மற்றும் T (2) P மற்றும் T (3) P மற்றும் S (4) Q மற்றும் R (............)

37. பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட நபர் யார்?

(1) S (2) T (3) U (4) V (............)

38. கப்பம் கேட்டல் குற்றச்சாட்டுக்குள்ளான நபர் யார்?

(1) நிச்சயமாக T அல்லது V (2) நிச்சயமாக T அல்லது V இல்லை

(3) நிச்சயமாக T அல்லது S (4) நிச்சயமாக T அல்லது S இல்லை (............)

39. S க்கான குற்றச்சாட்டு யாது?

(1) பொதுச்சொத்து துஷ்பிரயோகம் (2) கொலை

(3) கப்பம் கேட்டல் (4) போதைப்பொருள் கடத்தல் (............)

40. இரண்டு சகோதரர்களுள் ஒருவர் யார்?

(1) P (2) Q (3) S (4) T (............)

- வினா இலக்கங்கள் 41 தொடக்கம் 45 வரையானவை டயஸ், சில்வா, மகிபால, சேனாதீர மற்றும் லயனல் ஆகிய ஐந்து நபர்களுக்கு உரித்தான A, B, C, D, மற்றும் E ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகள் தொடர்பானவை.

  - ❖ எந்தவொரு பிரதேசத்திலும் ஒருவருக்கு ஒரு காணி மாத்திரம் உள்ளது.
  - ❖ ஐந்து பிரதேசங்களிலும் ஒருவருக்கு காணிகள் உள்ளன. இருவர் நான்கு பிரதேசங்களில் காணிகளையும் ஏனைய இருவர் மூன்று பிரதேசங்களில் காணிகளையும் வைத்துள்ளனர்.
  - ❖ மகிபாலா காணிகள் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் டயஸுக்கு காணிகள் உள்ளன.
  - ❖ டயஸின் காணிகள் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் சேனாதீரவுக்கு காணிகள் உள்ளன.
  - ❖ மகிபாலா மற்றும் லயனலுக்கு ஒரே எண்ணிக்கையான காணிகள் உள்ளன.
  - ❖ சேனாதீரவிடம் உள்ள காணிகளை விடவும் சில்வாவுக்கு குறைவான காணிகளே உள்ளன.
  - ❖ டயஸ், லயனல் மற்றும் மற்றைய ஒரு நபருக்கு C பிரதேசத்தில் காணிகள் இல்லை.
  - ❖ E பிரதேசத்தில் மகிபாலா உட்பட மூன்று நபர்களுக்கு காணிகள் இல்லை.

மேற்படி தகவல்களின்படி பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அதற்கு எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.

41. சில்வாவிடம் உள்ள காணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4

(3) 5 (4) தீர்மானிக்க முடியாது. (............)

42. அதிக எண்ணிக்கையான காணிகளைக் கொண்ட நபர் யார்?

(1) மகிபாலா (2) லயனல்

(3) டயஸ் (4) சேனாதீர (............)

43. சில்வாவிடம் எந்தப் பிரதேசத்தில் காணிகள் இல்லை?

(1) B (2) C (3) D (4) E (............)

44. மகிபாலாவிடம் எந்தப் பிரதேசத்தில் காணிகள் இல்லை?

(5) A (6) B (7) C (8) D (............)

45. லயனலிடம் எந்தப் பிரதேசத்தில் காணிகள் இல்லை?

(1) A (2) B (3) D (4) E (............)

- இலக்கங்கள் 46 தொடக்கம் 55 வரையான வினாக்களுக்கான சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அதற்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.


46. சுரங்க பிறக்கும்போது அவனது தாயாரின் வயது 30 வருடங்கள் மற்றும் அவனது சகோதரி சச்சினியின் வயது 4 வருடங்கள். சச்சினி பிறக்கும்போது அவளது தந்தையின் வயது 29 வருடங்கள் எனில் சுரங்கவின் தந்தை மற்றும் தாயாரின் வயது வித்தியாசம் யாது?

(............)

47. நான்கு இலக்கங்களைக் கொண்ட எண்ணொன்றின் இரண்டாவது இலக்கம் நான்காவது இலக்கத்தை விடவும் மூன்று மடங்கு. முதலாவது இலக்கம் மூன்றாவது இலக்கத்தை விடவும் நான்கு மடங்கு. நான்காவது இலக்கம் மூன்றாவது இலக்கத்தை விடவும் மூன்று மடங்கு எனில் மூன்றாவது இலக்கம் யாது?

(............)

48. பின்வரும் உருவிலிருந்து எத்தனை வேறுபட்ட சதுரங்களைப் பெற முடியும்?



(............)

49. நான்கு அங்குல நீளம் கொண்ட கனவடிவ மரத்துண்டின் ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒரே நிறத்தில் வர்ணம் பூசப்பட்டுள்ளது. இது ஒரு அங்குல நீளம் கொண்ட சிறிய கனவடிவ குற்றிகளாக வெட்டப்படின் அவற்றுள் இரண்டு பக்கங்களுக்கு மாத்திரம் வர்ணம் தீட்டப்பட்ட எத்தனை துண்டுகளைப் பெறலாம்?

(............)

50. குறித்த மாணவர் குழுவில் மேலும் ஒரு மாணவர் சேர்க்கப்படின் அக்குழுவை மூன்று மாணவர்கள் அல்லது ஐந்து மாணவர்கள் கொண்ட சிறு குழுக்களாக பிரிக்கலாம். இக்குழுவில் மேலும் ஐந்து மாணவர்கள் இருப்பின் ஏழு மாணவர்களைக் கொண்ட சிறு குழுக்களாக பிரிக்கலாம் எனில் குழுவில் இருக்கக்கூடிய குறைந்தபட்ச மாணவர் எண்ணிக்கை யாது?

(............)

51. இரண்டு இலக்கங்களுக்கிடையிலான வித்தியாசம் பெரிய இலக்கத்தின் 20%ஆகும். சிறிய இலக்கம் 20 எனில் பெரிய இலக்கம் யாது?

(............)

52. ஒரு பையிலுள்ள மிட்டாய்கள் 2: 5: 3 என்ற விகிதத்தில் A, B, மற்றும் C ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்படின் B என்பவர் C இனை விடவும் 12 மிட்டாய்கள் அதிகம் பெற்றுள்ளார் எனில் A பெற்ற மிட்டாய்களின் எண்ணிக்கை யாது?

(............)


53. பென்சில் மற்றும் பேனாவின் விலை 80 ரூபா. பென்சில் மற்றும் புத்தகத்தின் விலை 180 ரூபா. பேனா மற்றும் புத்தகத்தின் விலை 200 ரூபா எனில் புத்தகத்தின் விலை யாது?

(............)

54. பிள்ளையொன்றிடம் காணப்படும் பென்சில்களை மூன்று நபர்களுக்கு சமமாக பங்கிட முடியும். எனினும் இவற்றை ஆறு நபர்களுக்கு சமமாக பங்கிட முடியாது. இவற்றை ஐந்து நபர்களுக்கு சமமாக பங்கிட வேண்டுமாயின் மூன்று மேலதிக பென்சில்கள் தேவை எனில் பிள்ளையிடம் காணப்படும் குறைந்தபட்ச பென்சில்களின் எண்ணிக்கை யாது?

(............)

55. ஒவ்வொரு பக்கத்துக்கும் 1, 2, 3, 4, 5 மற்றும் 6 என அடையாளம் இடப்பட்ட தாயக்கட்டையொன்றின் மூன்று நிலைகள் கீழே உருவில் தரப்பட்டுள்ளன.




இதில் 1 என அடையாளம் இடப்பட்டுள்ள பக்கத்துக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள இலக்கம் யாது?

(.........)

- இலக்கங்கள் 56 தொடக்கம் 60 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை இடைவெளியில் நிரப்புவதன் மூலம் எழுத்து வரிசைக்கான குறித்த கோலத்தினை பெறமுடியுமாயின் இடைவெளியில் வரக்கூடிய எழுத்துக்களை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

56. a _ ba _ b_b _a_b

(1). abaab (2). abbab (3). aabba (4). bbabb (............)

57. ba _ cb _ b_bab_

(1). acbb (2). bacc (3). bcaa (4). cabb (............)

58. bca _ b_aabc _ a _ caa

(1). acab (2). bcbb (3). cbab (4). ccab (............)

59. _ a _ b _ abaa _ bab _ abba

(1). aaabb (2). ababb (3). babab (4). babba (............)

60. _bc _ ca _ aba _ c_ ca

(1). abcbb (2). bbbcc (3). bacba (4). abbcc (............)